

கரிசல் நிலத்தின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர், சாகித்ய அகாதமி விருதாளர் கோவில்பட்டியை சேர்ந்த பூமணி அவர்களின் உடலுக்கு முன்னாள் அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் பெ. கீதாஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் விளாத்திகுளம் ஜீ.வி. மார்க்கண்டேயன், கோவில்பட்டி கருணாநிதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.



சிறைச்சாலையில் இருந்த கைதியின் மரணத்தை நியாயம் கேட்டுப் போராடும் குடும்பத்தினருக்காக மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அதிகாரியிடம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆஸ்டின் முறையான நீதி வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். உடன் மேயர் (பொறு) மேரி பிரின்சி லதா, மாநகரச் செயலாளர் ஆனந்த் வழக்கறிஞர் லீனஸ் ராஜ் மற்றும் கழகத்தினர் உள்ளனர்

### 9, 10-ஆம் வகுப்புகளில் 3-வது மொழித் தேர்வு தேர்ச்சி :

# மொழித் திணிப்பின் மற்றொரு வடிவம்!

## தி.மு.க. கல்வியாளர் அணிச் செயலாளர் முனைவர்,தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கண்டனம்!



சென்னை, ஜூலை 17 - தேசிய கல்விக் கொள்கை (NEP 2020) என்ற பெயரில், 9 மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்கள் மூன்றாவது மொழிக்கான பள்ளி அளவிலான உள் மதிப்பீட்டுத் தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்றால்தான் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் பெற முடியும் என்ற வகையில் சி.பி.எஸ்.இ. வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கை கடும் கண்டனத்திற்குரியது.

மூன்றாவது மொழியை “விருப்பம்” என்ற பெயரில் அறிமுகப்படுத்திவிட்டு, பின்னர் அதனைத் தேர்ச்சி பெற வேண்டிய கட்டாய நிபந்தனையாக மாற்றுவது, மறைமுக மொழித் திணிப்பு அல்லாமல் வேறு என்ன? இதுபோன்ற நடவடிக்கைகள் தேசிய கல்விக் கொள்கையின் உண்மையான நோக்கம் கல்விச் சீர்திருத்தமா அல்லது மொழித் திணிப்பா என்ற நியாயமான கேள்வியை எழுப்புகின்றன.

“இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்; இருமொழிக் கொள்கையை என்றும் காப்போம்” என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிலைப்பாடு, தமிழ்நாட்டின் மொழி உரிமைக்கான அடித்தளமாகும். அந்தக் கொள்கையை ஆட்சியிலும், அரசியலிலும் உறுதியாகக் காத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அதே பாதையில், தமிழ்நாட்டின் மொழி உரிமை, மாநில உரிமை மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தை பாதுகாக்கும் உறுதியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் - திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார். தி.மு.க-வின் நிலைப்பாடு தெளிவானது - இருமொழிக் கொள்கையில் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை.

கல்வி என்பது மாணவர்களின் திறனை வளர்க்கும் உரிமை. அதை மொழித் திணிப்புக்கான கருவியாக மாற்றுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. மாநிலங்களின் கல்வி மற்றும் மொழிக் கொள்கைகளில் ஒன்றிய அரசு தொடர்ச்சியாக தலையிட முயல்வது, இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான செயலாகும்.

தமிழ்நாடு பலமுறை தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய பிறகும், புதிய புதிய வடிவங்களில் மூன்றாவது மொழியை கட்டாயப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் புறக்கணிக்கும் செயலாகும்.

எனவே, சி.பி.எஸ்.இ. வெளியிட்டுள்ள இந்த சுற்றறிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். தேசிய கல்விக் கொள்கையின் பெயரில் எந்தவிதமான நேரடி அல்லது மறைமுக மொழித் திணிப்பையும் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா காட்டிய வழியில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காத்த கொள்கையில், மதிப்பிற்குரிய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டின் மொழி உரிமையையும் இருமொழிக் கொள்கையையும் பாதுகாக்கும் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் உறுதியாக நிற்கும்.

மொழித் திணிப்பை எதிர்ப்போம்!

இருமொழிக் கொள்கையை காப்போம்!

தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவோம் என்று தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வெளியிட்டுள்ள தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### நாகர்கோவில் சிறையில் சபரிவர்மன் மரணம்!

# குடும்பத்தாருக்கு நீதி - மனைவிக்கு அரசு வேலை கிடைக்க உதவி செய்வேன்!

## ஆறுதல் கூறிய பின் — எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. பேட்டி!

நாகர்கோயில் ஜூலை 17- கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஜெயிலில் சிறை கைதி சபரி வர்மன்இறந்த சம்பவம் தொடர்பாக நாகர்கோவில் சிறையின் தலைமை வார்டன் ஜெகன், வார்டன்கள் சிவகுமார், திருவிடைநம்பியை நேசமணிநகர் போலீசார் கைது செய்தனர். விசாரணை கைதி மரண சம்பவம் 3 சிறை வார்டன்கள் அதிரடி கைது செய்யப்பட்ட நிலையிலும் ஞாயம் கேட்டு போராடும் குடும்பத்தினரிடம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆஸ்டின் ஆறுதல் கூறி மரணித்தவரின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு முறையான நீதி மற்றும் அவரது மனைவிக்கு அரசு வேலை கிடைக்க உதவி செய்வேன் என உறுதிக் கூறினார்.

நாகர்கோவில் சிறை கைதி உயிரிழப்பு விவகாரத்தில் சபரி வர்மன் உடலில் 19 இடங்களில் காயம் இருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தகவல் வெளியானது. இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு மாவட்ட ஸ்டாலின் அதிரடி உத்தரவு பிறப்பித்தார். இதை அடுத்து இந்த குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 3 சிறை வார்டன்கள் ஜெகன், சிவகுமார் உட்பட 3 பேர் அதிரடியாக கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்களிடம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.நீதிமன்றக் காவலில் இருந்த கைதி உயிரிழப்பு: சம்பந்தப்பட்ட 3 சிறைத்துறை பணியாளர்கள் கைது செய்யப்பட்டனர்

கைது செய்யப்பட்ட நபர் காவல் நிலையத்தில் இருந்த முழு நேரமும் பதிவான கண்காணிப்பு கேமரா (CCTV) காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டதில், அவரிடம் காவல்துறையினர் முறையான விதத்தில் நடந்துகொண்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதற்கு முன்பாக, நடைமுறையின்படி அவருக்கு விரிவான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவ அதிகாரி, அவரது உடலில் எந்தவித காயமும் இல்லை என்றும், நீதிமன்றக் காவலுக்கு அனுப்பத் தகுதியானவர் என்றும் சான்றளித்தார்.

மேலும், நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்தப் பட்டபோது, காவல்துறையினரால் துன்புறுத்தப் பட்டதாக அவர் எந்தவித புகாரும் தெரிவிக்கவில்லை. அப்போது அவரது உடலில் எந்த காயமும் பதிவாகவில்லை. அதன் பின்னர் அவர் நாகர்கோவில் மாவட்ட சிறையில் நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டார்.

13.07.2026 அன்று, நாகர்கோவில் மாவட்ட சிறையில் நீதிமன்றக் காவலில் இருந்த சபரி வர்மன் உயிரிழந்ததாக தகவல் பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நடைமுறையின்படி நீதித்துறை நடுவர் விசாரணை (Inquest) மேற்கொள்ளப் பட்டது. மேலும், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர்கள் குழுவினரால், முழுமையான காணொளிப் பதிவுடன் (Videography) உடற்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையால் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு, முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் ஒரு பகுதியாக, சிறையில் பதிவான CCTV காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டன. கைதிகள் மற்றும் சிறைத்துறை பணியாளர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. மேலும், அறிவியல் மற்றும் ஆவண ஆதாரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

விசாரணையின் போது கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில், 12.07.2026 இரவு சிறைக்குள் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து, உயிரிழந்த சபரி வர்மன் சிறைத்துறை பணியாளர்களால் தாக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட சிறைத்துறை பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்:

N. ஜெஹான் - தரம்I சிறைக் காவலர் (GradeI Warder)

N. சுரேஷ் - தலைமை தலைமைக் காவலர் (Chief Head Warder)

J. சிவக்குமார் - தரம்II சிறைக் காவலர் (GradeII Warder)

இவ்வழக்கில் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.(தொடர்ந்து பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் ஈத்தாங்காடு பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர். என்பது குறிப்பிடதக்கது.

### அமராவதி அணை நீர் திறப்பு வரலாற்றில் முதலமைச்சர் உத்தரவிட்ட பிறகு

# திறக்கப்பட்ட தண்ணீர் விவசாயிகள் போராட்டத்தால் நிறுத்தப்படுவது இதுவே முதல்முறை!

## அணையை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டம்!

திருப்பூர், ஜூலை 17 - அமராவதி அணை நீர் திறப்பு வரலாற்றில் முதலமைச்சர் உத்தரவிட்ட பிறகு திறக்கப்பட்ட தண்ணீர் விவசாயிகள் போராட்டத்தால் நிறுத்தப்படுவது இதுவே முதல் முறை, அணையை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.

திருப்பூர் மாவட்டம், அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கும் முதலமைச்சரின் உத்தரவுக்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து அமராவதி அணை முன்பு திரண்டு போராட்டம் நடத்தினர்.

உடுமலை அருகே உள்ள அமராவதி அணை 90 அடி உயரம் கொண்டது. இந்த அணையின் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பாசனத்துக்காக பழைய ஆயக்கட்டு பகுதிக்கு ஆற்று வழியாகவும், புதிய ஆயக்கட்டு பகுதிக்கு பிரதான கால்வாய் வழியாகவும் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.

இந்நிலையில், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற அமராவதி ஆற்று மதகில் இருந்து ஜூலை 15ம் தேதி முதல் வரும் 21ம் தேதி வரை மொத்தம் 6 நாட்களுக்கு. 414.72 மில்லியன் கன அடிக்கு மிகாமல் அமராவதி ஆற்றில் தண்ணீர் திறந்துவிட முதல்வர் விஜய் உத்தரவிட்டார். அதன்படி, நேற்று காலை அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதற்குஎதிர்ப்பு தெரிவித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய ஆயக்கட்டு பகுதிக்கும் பிரதான கால்வாயில் 400 கனஅடி வீதம் தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

விவசாயிகள் முற்றுகையிடுவதை அறிந்து காவல் துறை துணை கண்காணிப்பாளர் தையல் நாயகி தலைமையில் போலீசார் அமராவதி அணை முன்பு குவிக்கப்பட்டனர். நீர் வளத்துறை அதிகாரிகளும் விரைந்து வந்தனர். உடுமலை வட்டாட்சியர் அருணா. காவல்துறை துணை கண்காணிப்பாளர் தையல் நாயகி, நீர்வளத் துறை செயற்பொறியாளர் சுப்ரமணி, உதவி செயற் பொறியாளர் ஆதிசிவன் ஆகியோர் விவசாய சங்க நிர்வாகிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

அப்போது, விவசாயிகள் பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கும் வரை இங்கிருந்து செல்ல மாட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் இங்கு வர வேண்டும் எனக்கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர். உயர் அதிகாரிகளுடன் பேசி தீர்வு காணப்படும் என அதிகாரிகள் கூறியதை விவசாயிகள் ஏற்கவில்லை. இதையடுத்து, அணையில் இருந்து ஆற்று மதகில் தண்ணீர் திறப்பை அதிகாரிகள் நிறுத்தினர். தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்தது. அமராவதி அணை நீர் திறப்பு வரலாற்றில், முதல்வர் உத்தரவிட்ட பிறகு திறக்கப்பட்ட தண்ணீர், விவசாயிகள் போராட்டத்தால் நிறுத்தப்படுவது இதுவே முதல்முறை என விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

தமிழ்நாடு விவசாய சங்க மடத்துக்குளம் தாலுகா செயலாளர் வீரப்பன் பேசியதாவது : -

பழைய, புதிய ஆயக்கட்டு என்பது இரு கண்கள் போன்றது. 2 தரப்பினரும் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறக்க வேண்டும். புதிய ஆயக்கட்டுக்கும் தண்ணீர் திறக்க வேண்டும் என்றும் நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். குடிநீர் திறப்பு எனக் கூறி ஒரு வாய்க்காலில் மட்டும் முறைகேடாக 300 கனஅடி நீர் திறந்து விட்டார்கள்.

நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு ஆயக்கட்டு பாசனத்தை பாதுகாக்கும் எண்ணம் கிடையாது. தாராபுரத்துக்கு ஏற்கனவே குடிநீருக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மடத்துக்குளம் தாலுகா பகுதியில் ஏற்கனவே உள்ள கூட்டு குடிநீர் திட்டம், தாமரைப்பாடி, குமரலிங்கம், மடத்துக்குளம், சங்கராமநல்லூர் கூட்டு குடிநீர் திட்டங்கள் தற்போது இல்லை. அதிகாரிகள் குடிநீர் தேவைக்கு என்று பொய் சொல்லி வருகிறார்கள். போராட்டத்தால் தற்போது தண்ணீர் நிறுத்தப்பட்டது. ஒரு அரசாணை வெளியிட்டு நிறுத்தப்பட்டது என்றால், இந்த அமராவதி பாசன விவசாயிகள் போராட்டத்தால் மட்டும்தான்.

அணை நீர்மட்டம் 52 அடியை நெருங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, முறையான நீர் பங்கீடு வேண்டும். அது 20ம் தேதிக்குள் நடக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இதனிடையே பிரதான கால்வாயில் 21ம் தேதி முதல் தண்ணீர் திறக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என செயற்பொறியாளர் உறுதி அளித்ததை தொடர்ந்து அனைவரும் கலைந்து சென்றனர். இதனால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

# சங்கரன்கோவில் - மலையடிப்பட்டியில் அகழாய்வுப் பணி!

## தென்காசி மரு.ராணி ஸ்ரீ குமார் எம்.பி .நேரில் ஆய்வு!

தென்காசி, ஜூலை 17 தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் மலையடிப்பட்டியில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வரும் தொல்லியல் அகழாய்வுப் பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் நேரில் பார்வையிட்டு, அங்கு கண்டறியப்பட்டுள்ள தொல்பொருட்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் குறித்து தொல்லியல் ஆய்வாளர்களிடம் கேட்டறிந்தார்.

கடந்த தி.மு.க .ஆட்சியில் சிறப்பாக நடைபெற்ற அகழ்வாராய்ச்சி பணிகளின் மூலம் தமிழர்களின் பெருமையை உலகம் அறிந்துகொண்டது குறிப்பாக காவேரிபூம்பட்டினம்,அழகன்குளம், பட்டறைபெரும்பத்தூர் மற்றும் கீழடி அதன்வரிசையில் தற்போது தென்காசி மலையடிப்பட்டி கிராமத்தில் கழக ஆட்சியில் தொடங்கி தற்போது சிறப்பாக அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகிறது. எனவும் நுண்கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. குறிப்பாக பகடைக்காய், ஆட்டக்காய்கள், பாசிமணிகள் காதணிகள் செம்புக்காசிகள் கருப்புசிவப்பு பானைகள் முதுமக்கள் தாழிகள் மற்றும் தங்கத்துகள்கள் மேலும் சங்க காலத்தை சார்ந்த படிக்கட்டு கிணறு உள்ளதை அகழ்வாராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது இது மிகவும் முக்கியமான அகழ்வாராய்ச்சி பணியாகும்.

இப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டுமெனவும் இந்த அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருட்களை பார்க்கும்போது தமிழர்களின் பெருமையும் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பையும் உலகிற்கு எடுக்காட்டும் அகழ்வாராய்ச்சியாக மலையடிப்பட்டி அமையும் எனவும் கீழடி போல் மலையடிப்பட்டி அகழ்வாய்வை நினைவு சின்னமாக அரசு அறிவிக்க வேண்டுமென தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தொல்லியல்துறை அலுவலர் காளீஷ்வரன்,வழக்கறிஞர் சதீஷ், ஊராட்சி மன்ற தலைவர் வீரையா, கிளைச் செயலாளர் மாவட்ட மகளிரணி பொன்னுத்தாய் உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.07.2026) சத்திரம் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்விற்கு திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை தாங்கினார். கழக மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெய்குமார், மாநில மாணவரணி துணைச் செயலாளர் சோலைராஜ், மாநகரச் செயலாளர் மு. மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என். சேகரன், மாநில அணி நிர்வாகி செந்தில், பகுதி கழகச் செயலாளர் மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

### காளையார்கோயிலில்

# ரூபாய் 1000 லஞ்சம் வாங்கிய வட்டார விரிவாக்க அலுவலர் கைது!

சிவகங்கை, ஜூலை 17 - சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றிய அலுவலகத்தில் வட்டார சமூகநல அலுவலராக ஜெயராணி பணியாற்றி வருகிறார். இவரிடம் காளையார்கோவிலைச் சேர்ந்த சிவானந்தம் தனது இரண்டு பெண் குழந்தைக்கான அரசு நலத்திட்ட உதவிகள் ஏதும் உள்ளதா என்று கேட்டாராம். அதற்கு ஜெயராணி ரூபாய் 1000 லஞ்சமாக கொடுத்தால் இதுகுறித்து தகவல் தருகிறேன் என்று கூறியுள்ளார்.

லஞ்சம் தர விரும்பாத சிவானந்தம் சிவகங்கையில் உள்ள மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸில் புகார் செய்தார். அவர்கள் ரசாயன பவுடர் தடவிய 1000 ரூபாய் நோட்டினை சிவானந்தத்திடம் கொடுத்தனர். சிவானந்தம் ஜெயராணியிடம் ரசாயன பவுடர் தடவி ரூபாய் ஆயிரத்தை கொடுத்த பொழுது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத் துறை இன்ஸ்பெக்டர் கண்ணன், ஜேசுதாஸ் தலைமையிலான லஞ்ச ஒழிப்பு போலீசார் திருமதி ஜெயராணியை கைது செய்தனர்.

இதுகுறித்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் ஜெயராணியிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள்.